[1972 சனவரி 28

திருமதி த. ந. அனந்தநாயகி : பக்கிங்ஹாம் கால்வாய் தூர்க்கப்பட்டு அங்கு டியூப் ரெயில்வே போடப்படும் பிரச்சினை பற்றிப் பேசப்பட்டது உண்மையா? ஆதாரங்கள் உண்டா? நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மத்திய அரசாங்கத்தின் பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: ரயில்வே இலாகா அண்டர் கிரவுண்ட் ரயில் பாதையை அமைக்க ஏற்கனவே சர்வே செய்து வருகிறது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நமக்குக் கிடைத்திருக்கிற தகவல் ரயில்வே இலாகா பரிசீலித்து வருகிறது என்பதுதான். பரிசீலனை முடிந்த பிறகுதான் அண்டர் கிரவுண்ட் ரயில்வேயா, சர்ஃபேஸ் ரயில்வேயா என்று முடிவு செய்யப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மத்திய அரசு ரயில்வே அமைச்சர் அவர்கள் அண்மையில் தமிழ்நாட்டுக்கு வந்தபோது திருநெல்வேலி—கன்னியாகுமரி ரயில் பாதையை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் என்ன சம்பந்தம்?

கூட்டுறவுச் சங்கங்களுக்கு பத்திரப்பதிவுக் கட்டணம்.

***94 வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களுக்கு பத்திரப்பதிவு செய்வதில் பதிவுக் கட்டணம் விலக்களிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ரூபாய் ஐயாயிரத்துக்கு மேற்படாத பத்திரங்களைப் பதிவு செய்வதில், கூட்டுறவுக் கழகங்களுக்குப் பதிவுக் கட்டணத்தில் பாதி என்ற அளவுக்குச் சலுகை காட்டப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பான்மையோராக உள்ள கூட்டுறவுக் கழகங்களுக்கு பதிவுக் கட்டணத்தில் முழு அளவு சலுகை அளிக்கப்படுகிறது. கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்களுக்கும் இந்தச் சலுகை உண்டு.

திரு. கே. எ. வகாப் : சில கட்டடக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இம்மாதிரியான சலுகைகள் மறுக்கப்படுவது என்பது உண்மையா? உதாரணமாக, இராணிப்பேட்டையில் பாரி அலுவலர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் கட்டணச் சலுகை கோரியும் பெறமுடியவில்லை என்பது உண்மையா? அதற்கு கட்டணச் சலுகை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் சொன்னது ரிஜிஸ்ட்ரேஷன் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஸ்டாம்ப் டியூட்டி பற்றிப் பேசுகிறாரோ என்னவோ தெரியவில்லை.